BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்டன் நகர நிர்வாகம் பரிந்து பேசியதன் விளைவாக சிறு வணிகர்களுக்கு வாடகை நிவாரணம்

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 24, 2020) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பரிந்து பேசியதன் பலன்கள் நிஜமாகின; சிறு வணிகர்களுக்காக கனடா நாட்டு அவசர நிலை வணிக வாடகைக்கான உதவியை [Canada Emergency Commercial Rent Assistance (CECRA)] கொள்கையளவில் அதன் அனைத்து பிரதேசங்கள் மற்றும் வட்டாரங்களில் நடைமுறைப்படுத்த ஒரு உடன்படிக்கையை எட்டியதாக கூட்டு அரசாங்கம் அறிவித்தது. இந்த திட்ட முறையானது கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலினால் பாதிப்புக்கு உள்ளான சிறு வணிகங்களுக்கு அவர்களின் வாடகையில் 75 சதவீத அளவுக்கு குறைக்கும்.

இந்தப் புதிய CECRA திட்டமுறையானது ப்ராம்ப்ட்டன் நகரில் உள்ள சிறு வணிகங்களுக்கு பெரிதும் தேவைப்பட்ட ஆதரவினை வழங்கும், மற்றும் இந்த நடவடிக்கையானது, அத்தியாவசியம் அல்லாத வணிகங்களை மூடுவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டதிலிருந்து நகரம் பரிந்து பேசி வந்த விஷயமாகும். ஏப்ரல் 1 ஆம் தேதியன்று மேயர் ப்ரவுன் அவர்கள் சிறு வணிகங்களுக்காக வாடகை நிவாரணம் வேண்டி, அதிபர் ஃபோர்ட், மற்றும் அமைச்சர் க்ளார்க், ஆகியோருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். மார்ச் மாதத்தில் கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்தே சிறு வணிகங்களுக்கான வாடகை நிவாரணம் என்பது ஒரு முக்கிய விஷயமாக இருந்து வந்திருக்கிறது. ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி நடைபெற்ற ஒரு டெலி டவுன் ஹாலில் சிறுவணிகர்களின் பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை நட்த்திய ஒரு வாக்கெடுப்பில் 73 சதவீத பங்கேற்பாளர்கள், தாங்கள் எந்த வித நிவாரணமும் பெறவில்லை என சுட்டிக்காட்டினார்கள். கோவிட்-19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிரான பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை கூட்டங்கள் அனைத்திலுமே, கூட்டரசு மற்றும் பிரதேச அரசின் பிரதிநிதிகளால் பேசப்பட்டு வந்த விஷயம் இதுவேயாகும்.

மேயரின் கோவிட் 19 பொருளாதார பணிப்படை (Mayor’s COVID-19 Economic Support Task Force) என்பது, ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கென அமைக்கப்பட்ட நான்கு பணிப்படைகளில் ஒன்றாகும். இந்த நான்கு பணிப்படைகளும் கோவிட்-19 (COVID-19) தொற்று பரவலைச் சமாளிக்க ஏற்படுத்தப்பட்டவையாகும். பொருளாதார ஆதரவு பணிப்படையானது, ப்ராம்ப்ட்டன் நகரில் வணிக நிவாரண முயற்சிகளுக்கு அதரவளிப்பதற்கான பரிந்துரைகள் மற்றும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு கொண்டது. இந்த பணிப்படையானது, கூட்டு அரசாங்கம் மற்றும் பிரதேச அரசாங்கம் மற்றும் அவர்களுடன் ப்ராம்ப்ட்டன் வர்த்தக வாரியம், டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் வர்த்தக மேம்பாட்டுச் சங்கம் (BIA), கனடா நாட்டு கறுப்பர் வர்த்தக கழகம் (CBCC), ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டது; இது கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் ஏற்பட்ட சமயத்தில் இருந்தே ப்ராம்ப்ட்டன் நகர வணிகங்களுக்கு ஆதரவளிப்பதில் செயல்பாட்டுடன் இருந்து வந்திருக்கிறது. இந்த பணிப்படையானது இரண்டுமுறை டெலி டவுன்

ஹாலை நடத்தியுள்ளது; இதில் மொத்தமாக 500 சிறுவணிகர்கள் பங்கேற்றனர்; இதுவல்லாமல் சிற்றுண்டி உணவக பிரிவு மற்றும் பெரும் வணிகர்களுக்கான இரண்டு டெலி டவுன் ஹாலும் நடத்தப்பட்டது. இத்துடன், கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் ஏற்பட்ட சமயத்தில் இருந்தே ப்ராம்ப்ட்டன் வணிகர்களிடம் இருந்து சுமார் 1200 கேள்விகளுக்கு அலுவலர்கள் பதில் அளித்துள்ளனர்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"நமது சமுதாயத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு, நமது வணிகங்கள் முக்கியமானவையாகும், மற்றும் இந்த கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் ஏற்பட்ட சமயத்தில் இருந்தே அவர்களுக்கு ஆதரவளிக்கவும் பரிந்து பேசவும் நம்மால் ஆன அனைத்தையும் அவர்களுக்கு செய்து வருகிறோம். நமது முயற்சிகள் அனைத்தும் நமது வணிக சமுதாயத்திற்கான ஒரு மாற்றத்தைக் கொண்டு வரத் தேவையான கண்ணால் காண முடிகின்ற நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்வதைக் காணும்போது மகிழ்ச்சி உண்டாகிறது. இப்படியான தீர்வுகளை அடைவதற்கு உதவி செய்த, நமது பொருளாதார ஆதரவுக்கான பணிப்படையில் இருக்கின்ற, கூட்டு அரசாங்க மற்றும் பிரதேச அரசாங்க பிரதிநிதிகளாகிய எம் பி கமல் கேரா அவர்கள் எம் பி பி ப்ரப்மேத் சர்க்காரியா அவர்களுக்கும், மற்றும் ப்ராம்ப்ட்டன் வர்த்தக வாரியம், டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் BIA மற்றும் கனடியன் ப்ளாக் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அமைப்புக்களுக்கும் நான் நன்றிகூற விரும்புகிறேன். கோவிட்-19 ( COVID-19_ தொற்று பரவலானது பொருளாதாரத்தைக் கலைத்துப்போட்ட ஒரு அலை எனவும் மற்றும் நமது குடியிருப்பு வாசிகள் மற்றும் வணிகர்களுக்கு ஆதரவளிக்க நாம் கூட்டு சேர வேண்டும் எனவும் நிரூபித்துவிட்டது."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"இது அனைவருக்கும் - குறிப்பாக நமது வணிக உரிமையாளர்கள் மற்றும் இயக்கம் செய்பவர்களுக்கு மிகவும் மன அழுத்தம் கொடுக்கும் நேரமாகும். இந்த நெருக்கடி காலம் முழுவதிலுமாக, நமது வணிக சமூகத்துடன் நாங்கள் மிகவும் ஈடுபாடு கொண்டுள்ளோம்; அவர்களின் கவலைகள் பற்றி நாங்கள் காது கொடுத்து கேட்டபடியே இருக்கிறோம். அவர்கள் தங்கள் வணிகங்கள், தங்கல் ஊழியர்கள் மற்றும் அவர்களின் எதிர்காலம் குறித்து அக்கறை கொண்டுள்ளனர். இதற்காகவே, நாங்கள் இப்போது அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிப்போம், நாம் அனைவரும் மீட்பு மற்றும் நமக்கான புதிய இயல்பு வாழ்க்கையை எதிர்பார்க்கிறோம். இந்த புதிய திட்டம் பலருக்கும், குறிப்பிடத்தக்க மற்றும் உடனடி நிவாரணத்தை வழங்கும் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்."

- *பால் வின்செண்ட், கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் இணை தலைவர், மேயரின் கோவிட் -19 பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

"இந்த நெருக்கடியானது, நமது சமூகத்தில் பலருக்கும் நம்பமுடியாத அளவிற்கு சவாலானதாக இருந்தாலும், பின்னடைவு, கருணைகாட்டுதல் மற்றும் சமூக ஒற்றுமை உணர்வு ஆகியவற்றையும் நாம் கண்ணாரக் கண்டோம். ஒரு சிலர் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும்போது, மற்றவர்கள் நெருக்கடிக்கு ஆதரவளிப்பதற்கும் உணவு மற்றும் பணத்தை நன்கொடையாக வழங்குவதற்கும் தங்கள் தொழில்களை முன்னிலைப்படுத்துவதற்கான சவாலை எதிர்கொண்டதன் மூலம் உயர்ந்துள்ளனர். எங்களால்

முடிந்தவரை நமது சமூகத்த்திற்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம், என்பதுடன் நீங்களும் ஒருவருக்கொருவர் தொடர்ந்து ஆதரவளிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும், இந்த கடினமான காலத்தை நாம் நிச்சயம் கடந்து செல்றுவிடுவோம்."

- *மைக்கேல் பேல்லெஸ்கி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6, ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் இணை தலைவர், மேயரின் கோவிட் -19 பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426* | *Monika.Duggal@brampton.ca*